**கரைதுறைப்பற்று பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 172(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலானது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுத்துவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா

எனவும் அதன் முறைமைகள் வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்படுகளின் பிரகாரம் எனது அறிக்கையின் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சபைக்கு கிடைக்கப்பெற்றிருந்த உள்ளூர் அபிவிருத்தி உதவித்திட்டக் கொடை கூட்டுமொத்தம் ரூபா 36,718,030 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் நிதியாண்டின் இறுதிக்கணக்குகளில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சீராக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | பொருட்கள் சேவைகள் பெறப்பட்டிருக்காது மற்றும் கொடுப்பனவுகள் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருக்காத 16 கொடுக்கல் வாங்கல்களுக்குரிய கூட்டுமொத்தம் ரூபா 8,866,246 கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | வருமானமாக மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | -மேற்படி- |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்புகள் | இணங்காமைகள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் 571(1),(2),(3) | கூட்டுமொத்தம் ரூபா 1,721,468 பெறுமதியான காலங்கடந்த 04 கேள்வி வைப்புக்கள், 100 வாடகை வைப்புக்கள் மற்றும் 04 பிடிபண வைப்புக்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXIV இன் பிரிவு 4 | இடமாற்றம் பெற்றிருந்த மற்றும் பதவியினை விட்டுச்சென்றிருந்த 07 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய பதவியினர் கடன் கூட்டுமொத்தம் ரூபா 299,676 தொகையினை கடந்த 13 வருடங்களாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்து. | கடன் நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 60,038,075 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 35,431,286 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பாக தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2023 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2022 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் | 721,000 | 194,835 | 194,835 | - | 1,100,000 | 171,980 | 171,980 | - |
| (ii) வாடகை | 21,395,700 | 25,465,436 | 25,490,958 | 2,241,146 | 25,749,480 | 20,702,378 | 19,669,220 | 2,612,653 |
| (iii) உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 2,729,100 | 3,606,462 | 3,606,462 | - | 3,672,400 | 3,376,912 | 3,376,912 | - |
| (iv) ஏனைய வருமானம் | 52,895,730 | 66,301,439 | 66,993,389 | 2,837,300 | 28,530,390 | 33,970,286 | 33,970,286 | 3,529,250 |
| கூட்டுத் தொகை | **77,741,530** | **95,568,172** | **96,285,644** | **5,078,446** | **59,052,270** | **58,221,556** | **57,188,398** | **6,141,903** |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 08 தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய இறைச்சிக்கடை வாடகை மற்றும் சந்தைக்குத்தகை கூட்டுமொத்தம் ரூபா 1,665,522 நாளது வரை அறவிடப்பட்டிருக்காது கடந்த 01 தொடக்கம் 02 ஆண்டுகளாக தொடர்ந்தும் நிலுவைகளாக விடப்பட்டிருந்தன. | தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவைகளினை அறவிட்டுக கொள்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நேர்முன்னைய வருடத்தில் உள்ளூர் அபிவிருத்தி உதவித்திட்டக் கொடை நிதியின் மூலம் கூட்டுமொத்தம் 21,702,465 பெறுமதியில் நிர்மானிக்கப்பட்டிருந்த முள்ளியவளை கடைத்தொகுதி குறித்த நோக்கத்துக்குப் பயன்படுத்தப்பட்டிருக்காமையால் கடந்த ஒரு வருடமாக அதிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் கிடைத்திருக்கவில்லை. | தொடர்ந்து இயங்க நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை பூரணமாக பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2013 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு உள்ளூர் சேவை மேம்படுத்தல் திட்டத்தின கீழ் ரூபா 9,792,252 கூட்டுமொத்த கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த உண்ணாப்புலவு சிறுவர் பூங்கா கடந்த 08 ஆண்டுகளாக குறித்த நோக்கத்துக்கு பயன்படுத்தப்படாமல் பாழடைந்து காணப்பட்டிருந்தது. | சிறுவர் பூங்காவில் பொருத்தப்பட்டிருந்த உபகரணங்கள் சபைத் தீர்மானத்திற்கு அமைவாக முல்லைத்தீவு கடற்கரையில் பொருத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | சொத்துக்களை பூரணமாக பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 2019 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டிருந்த முல்லைத்தீவு மத்திய பேரூந்து நிலையத்துக்கான கட்டுமான வேலைகள் உரியவாறு பூரணப்படுத்தப்பட்டிருக்காமையால் அவற்றை பூரணப்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் நடுப்பகுதியில் சபை நிதியிலிருந்து கூட்டுமொத்தம் ரூபா 1,852,902 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்காமையால் கடந்த 03 ஆண்டுகளாக பொது மக்கள் இப் பேரூந்து நிலையத்தை பயன்மிக்க வகையில் பயன்படுத்த முடியாததுடன் பயணிகள் பேரூந்துகளும் பிறிதொரு இடத்தில் தரிக்க விடப்பட்டிருந்தன. | பேரூந்து நிலையத்திற்கான அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் பேரூந்து நிலையத்தின் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது | கட்டுமான வேலைகள் விரைவாக முடிவுறுத்தப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்கு விடப்படுதல் வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்டிருந்த உழவு இயந்திரங்கள், பவுசர் லொறி, கழிவகற்றும் லொறி மற்றும் மோட்டார் சைக்கிள் போன்ற 12 வாகனங்கள் நாளது வரை சபைக்குரித்தாக்கப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிம மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சபைக்குரித்தாக்கப்படுவதற்கு தாமதமின்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | சபையின் தலைமை அலுவலகம் மற்றும் 05 உப அலுவலகங்கள் அமைக்கப்பட்டிருந்த காணிகள் நாளது வரை சபைக்குரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | சபைக்குரித்தாக்கப்படுவதற்கு தாமதமின்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |